1995 ஏப்ரல் 20]

என்று சொன்னார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாக விருதுநகரில் கொண்டாடப்பட்டது. அதற்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராசருடைய பிறந்தநாள் விழா விருதுநகரில் மட்டும் நடத்தப்படவில்லை. மாநில அளவில் நடத்தப்படுகிறது. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் புரட்சித் தலைவி அரசின் சார்பிலே நடத்தப்படுகிறது. இந்த அரசைப் பொறுத்தமட்டில், தியாகத்திற்கு 'ஜாதி இல்லை; கட்சி இல்லை, தொண்டுக்கு பேதம் இல்லை' என்கின்ற உணர்வோடு நாட்டுக்கு உழைத்தவர்கள் யார், யாரோ, யார் யாரெல்லாம் பெருமைப்படுத்தப்பட வேண்டுமோ அப்படிப்பட்டவர்களையெல்லாம் பெருமைப்படுத்தி வருகின்ற ஒரே அரசு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுதான் என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *377*, திருமதி டி. சக்குபாய் தேவராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

377—

திருவள்ளூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

33657*—திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூரில் உள்ள நகர் மன்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[*1995 ஏப்ரல் 20*

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் திருவள்ளூரில் உள்ள நகர்மன்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இதுவரை முன்மொழிவு வரப்பெறவில்லை. வரப்பெற்றால், உயர்நிலைக் குழுவின் பரிசீலனைக்குப் பின்னர் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி டி. சக்குபாய் தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொற்காலம் படைத்துவரும், இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாகத் திகழும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் 'இல்லை' என்று சொல்லுக்கே இடமில்லை. எனவே, திருவள்ளூர் நகரத்தில் நகர்மன்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இந்த ஆண்டே அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முன்மொழிவு வரப்பெற்றால், இந்த ஆண்டே அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *378*, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை.

வினா எண் *379*, திரு. டி. வேலையா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

379—

சுத்தமல்லி ஊராட்சியில் திருமண மண்டபம் கட்டுதல்

21818*—திரு. டி. வேலையா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா --

திருநெல்வேலி தொகுதி, மானூர் ஒன்றியம், சுத்தமல்லி ஊராட்சி ஆதிதிராவிடர் குடியிருப்பில் திருமண மண்டபம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?